

# இப்ப சந்தோஷமா இருக்கு

**ரா**ஜேஷின் சேகரிப்புகள் குறித்து அவருடைய மனைவி விஜயலட்சுமி சொன்னது:

"எனது சொந்த ஊர் ஒபசமுத்திரம். எங்களுக்கு பெற்றோர் பார்த்து நிச்சயித்த திருமணம். அவருடைய அரிய சேகரிப்புகள் பற்றி முதலில் சொன்னார். நான் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆர்வமும் காட்டவில்லை.

அவரின் வருமானம் இதிலேயே அதிகம் கரைந்ததால் கோபம் வந்தது. அதனால், எதிர்ப்பு தெரிவித்தேன். ஆனால், 'காந்தியே எனக்கு முக்கியம். அப்புறம்தான் குடும்பம்' என்பதில் அவர் தெளிவாக இருந்தார். அதனால், விட்டுக் கொடுத்துப் போவது என்று நான் முடிவு செய்தேன்.

இப்போது அவருடைய பிரமிப்பான சேகரிப்புகள் ஆச்சரியப்படுத்துகின்றன. பலரும் பாராட்டும்போது, அதைப் பார்க்க சந்தோஷமாகவும், பெருமையாகவும்

அளவில் சேகரிக்கத் தொடங்கினேன்.

இதன் மூலம் காந்திஜியின் சக்திமிக்க ஆளுமையை என்னால் உணர முடிந்தது. இதனால் மேலும் கவரப்பட்டு காந்திஜி சம்பந்தப்பட்ட மற்ற நினைவுப் பொருட்களையும் சேகரித்துக்கொண்டு இருக்கிறேன். ஆயுள் வரை சேகரிப்பேன்.

### ஆசை

காந்திஜி பற்றிய என்னுடைய சேகரிப்பில் 120–க்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிடப்பட்ட தபால் தலைகளும், 10–க்கும் மேற்பட்ட நாடுகளில் வெளியிட்ட நாணயங்களும், 100–க்கும் மேற்பட்ட அஞ்சல் அட்டைகள், தபால் உறைகள், 200–க்கும் மேற்பட்ட சிறப்பு உறைகள், 400–க்கும் அதிகமான காந்திஜியின் புகைப்படங்கள், காந்திஜி பணியாற்றிய 'அரிஜன்', 'யங் இந்தியா' பத்திரிகைகள், காந்திஜி உருவ ரூபாய் நோட்டுகள், 'டோக்கன்'கள், 'டெலிபோன் கார்டு'கள், 70–க்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ள காந்திஜியின் சிலைகளைப் பற்றிய குறிப்புகள், புகைப்படங்கள் மற்றும் புத்தகங்கள், சி.டி.க்கள், காந்திஜியின் கையெழுத்துகள், அவர் சம்பந்தப்பட்ட கடிதங்கள் என்று பல வகையானவை எனது சேகரிப்பில் அடங்கும்.

இவை யாவும், காந்தியின் பெருமைகளை நான் முழுமையாக உணர்ந்துகொள்ள வழிவகை செய்தன. ஏனென்றால், அந்த அளவுக்கு உலக நாடுகள் எந்த நாட்டு தலைவருக்கும் தராத கவுரவத்தையும், மரியாதையையும் நமது தேசத் தந்தைக்கு வழங்கி உள்ளன.

இத்தருணத்தில் இளைய தலைமுறையினரும், நமது சமுதாயமும் காந்தியை மறந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இது வருந்தத்தக்கது. உலகமே மகாத்மாவின் அகிம்சை கருத்துகளையும், சிந்தனைகளையும் பின்பற்ற முயன்றுகொண்டு இருக்கும் நிலை இங்கும் மலர வேண்டும்.

### அடுத்த கட்டம்

www.gandhiworld.in என்ற இணைய தளத்தை தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தொடங்கினோம். காந்திஜியின் தனிச் செயலராக பணியாற்றிய வி.கல்யாணம் தொடங்கி வைத்தார். இது, காந்திஜி பற்றிய செய்திகள் மற்றும் எனது சேகரிப்புகளை உள்ளடக்கியது.



சேகரிப்புகளுடன் ராஜேஷ்

காந்திஜியின் பெருமைகளை குழந்தைகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காக புகைப்பட காட்சிகளை நடத்தியபோது சில நடைமுறை சிக்கல்களை உணர முடிந்தது. எனவே, அதை தடையின்றி செயல்படுத்துவதற்கான வழி என்ன என்று யோசித்தபோது என் மனதில் தோன்றியது 'அறக்கட்டளை' உருவாக்குவது என்பது.

அந்த கனவை நனவாக்க பக்க பலமாக இருப்பவர்கள் சென்னை வக்கீல் க.ஷியாம்சுந்தர், கும்மிடிப் பூண்டி திலிப்குமார், பிரமோத்.

### வேண்டுகோள்

இத்தகைய சேகரிப்புகளுக்கும், செயல்பாடுகளுக்கும் எனது வாழ்வில் பெரும் பகுதி நேரத்தையும், சக்தியையும் செலவழித்துள்ளேன். அது நிறைய நேரங்களில் மிகுந்த மகிழ்ச்சியையும், பல தருணங்களில் மனக் கசப்புகளையும் தந்துள்ளது. ஆனால், என்னை மனிதனாக வளர்த்துள்ளது என்றால் மிகையாகாது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு இப்படி ஏதாவது ஆக்கபூர்வமான பொழுதுபோக்கை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இதற்காக என் வருமானத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டுள்ளேன். நிறைய நேரங்களில் வீட்டுக்கு– குழந்தைகளுக்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள் வாங்கக்கூட இயலாத நிலைகளை, மன உரசல்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

முதலில் சங்கடப்பட்ட– கோபப்பட்ட குடும்பத்துக்கு, போக போக என்னைப் புரிந்துகொள்ளும் பக்குவம் ஏற்பட்டது. அப்பா– அம்மா பாராட்டை முழுமையாக பெறுவேன். மனைவி விஜயலட்சுமி எனது செயல்களுக்கு உறுதுணையாக இருக்கிறார். அது, நான் வேகமாக பணியாற்ற உற்சாகத்தைத் தருகிறது" என்று கூறும் இரு குழந்தைகளின் (ஸ்ரீஹரிஸா, ராகுல் ராம்) அன்பான இந்த அப்பா, இந்துஸ்தான் பெட்ரோலியம்